செ.வெ.எண்.826 நாள்.12-11-09

# செய்திக்குறிப்பு

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் உலகெங்கும் உள்ள தமிழாய்வாளர்கள் மற்றும் தமிழ் ஆர்வலர்கள் பலரின் கோரிக்கையை ஏற்று, 2010 சூன் திங்கள் 23ஆம் நாள் முதல் 27ஆம் நாள் வரை கோவையில் உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டினைச் சீரும் சிறப்புமுற நடத்திட அறிவுறுத்தியவாறு பல்வேறு பணிகள் நடைபெற்று வருகின்றன. கோவையில் மாநாடு நடைபெறவுள்ள 'கொடீசியா' வளாகத்தையும் அண்மையில் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் நேரில் சென்று ஆய்வு செய்து தேர்ந்தெடுத்துள்ளார்கள்.

இயல், இசை, நாடகம் எனும் முத்தமிழாக ஒளிரும் தமிழ்மொழியை இன்றைய அறிவியல் தொழில் நுட்ப வளர்ச்சிகளுக்கும், தேவைகளுக்கும் ஈடுகொடுக்கும் வகையில் வளர்த்தெடுக்க வேண்டியதன் இன்றியமையாமையைக் கருத்திற்கொண்டு, கோவையில் நடைபெறவுள்ள உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டின் ஒரு பகுதியாகத் 'தமிழ் இணைய மாநாட்டினை'யும் நடத்திட மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அறிவுறுத்தியுள்ளார். இதற்கிணங்க, கோவையில் நடைபெறவுள்ள உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டின் ஒரு பகுதியாகத் தமிழ் இணைய மாநாட்டினை உலகத் தமிழ்த் தகவல் தொழில் நுட்ப மன்றத்துடன் (உத்தமம்) இணைந்து நடத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இது தொடர்பாக நடைபெறும் கருத்தரங்குகள், ஆய்வரங்குகள் ஆகியவற்றில் பல்வேறு நாடுகளிலும் உள்ள தமிழ்த் தகவல் தொழில் நுட்பத் துறை

வல்லுநர்களும் கணினித் தமிழ் அறிஞர்களும் பங்குபெறுவார்கள். உலகளாவிய அளவில் தமிழுக்குத் தகவல் தொழில் நுட்பம் சேர்த்துள்ள வளங்களை வெளிப்படுத்தும் வகையிலும், இனி எதிர்வரும் காலங்களில் அது செல்ல வேண்டிய பாதை, எட்ட வேண்டிய இலக்கு, இவை குறித்த சிந்தனைகள், இவற்றைத் தொகுத்து ஆற்ற வேண்டிய பணிகள் முதலியவற்றை முடிவு செய்யும் வகையிலும் இம்மாநாடு அமையும்.

2/2

வெளியீடு, இயக்குநர்
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9.